1987 ஏப்ரல் 20]

திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது ஒரு பிக்னிக் ஸ்பாட் அல்லது பிக்னிக் கேம்ப் என்று சொல்வார்களே, அப்படிப்பட்ட ஒரு நிலையை யாவது அங்கே ஏற்படுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி 'பிக்னிக் ஸ்பாட்"—டாக அறிவிப்பதற்கு வழி இருக்கிறதா என்பதை ஆய்வு செய்ய துறை மூலம் நடவடிக்கை எடுக்கப் படும்.

சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்புதல்.

418—(* வினா எண் 13417) திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை தொலைக்காட்சியில் காலை நிகழ்ச்சிகளை தமிழில் ஒளிபரப்பு செய்ய மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதல்வரின் ஆணைப்படி, 23—2—1987 முதல், தொலைக்காட்சியில் காலையில் இந்தி மொழியில் ஒளி பரப்பப்படும் தேசிய நிகழ்ச்சி வரவேற்க தக்க ஒன்று அல்ல என்றும், தேசிய நிகழ்ச்சியில் பொருத்தமான நேரத்தில், தமிழிலும் செய்தி ஒளிபரப்பு வேண்டும் என்றும் மாநில அரசால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தமிழக மக்களின் உள்ளக்கிடக்கையை எடுத்துக்காட்டுகின்ற வகையில் கடிதம் மூலம் எழுதியிருக்கின்ற அந்த கோரிக்கை இன்னும் நிறைவேற்றப்படாமல் இருப்பதை அறிந்து, தமிழக மக்களின் உணர்வுகளை மதித்து, காலையிலே ஒளிபரப்புகின்ற அந்த நிகழ்ச்சியானது தமிழிலே வந்தால் பொதுமக்கள் அனைவருக்கும் பார்ப்பதற்கும், ரசிப்பதற்கும் ஏதுவாக இருக்கும்.

தொலைக்காட்சிப் பெட்டி இப்போது இதுபோன்ற ஒளிப்பரப்பு களால் மக்கள் மத்தியிலே "தொல்லைக்காட்சிப் பெட்டியாக" பரப்புவதற்கு மீண்டும் வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா
பரப்புவதற்கு மீண்டும் வலியுறுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு தனது கடிதத்தில் சென்னை தொலைக்காட்சியில் இரண்டாவது அலை வரிசை வேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கும்போது, அதையும் சமீபத்தில் சென்னை—கொடைக்கானல் தொலைக்காட்சி நிலையம் மின்னலை மூலம் இணைக்கப்பட்டுள்ள தருணத்தில் இத்தகைய புதிய நிகழ்ச்சி வரவேற்கத்தக்கதல்ல என்றும் மாலை 5-30 மணி வரையிலும் சென்னை தொலைக்காட்சியில் மாலை நிகழ்ச்சிகள் எதுவும் இல்லாத காரணத்தால் காலை தேசிய நிகழ்ச்சியில் தமிழ் செய்திக்கு முக்கியத்துவம் கொடுத்து ஒளிபரப்பு செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், இந்தியும், ஆங்கிலமும் தெரியாத மக்கள் தமிழ்நாட்டில் பலர் இருக்கின்றனர் என்றும், தமிழ் நாட்டில் 60 முதல் 70 சதவீதம் வரை தொலைக்காட்சியில் ஒளி பரப்பு உள்ளதென்றும், இந்தப் புதிய நிகழ்ச்சியை பலர் விரும்ப வில்லை என்றும் காலையில் ஒரு புதிய நிகழ்ச்சியைத் தொடங்கு வதாக இருந்தால் அது வரவேற்கத்தக்க ஒன்றாக அமைய வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. மேற்படி கடிதத்தினை ஏற்று நடவடிக்கை எடுப்பதாக 27—2—1987 என்று பதில் வந்திருக்கிறது.

திரு. சைதை சா. துரைசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிப் பெட்டிகள் இன்றைக்கு தமிழகமெங்கும் ஊராட்சிமன்றங்கள் தோறும் நாம் வைத்திருக் கிறோம். ஆகவே இப்படி பொது மக்கள் மத்தியிலே எல்லோரும் பார்த்து ரசிக்கவும் விபரங்களை தெரிந்துக் கொள்ளும் வகை யிலே இருக்கின்ற காரணத்தால், கிரிக்கெட் போன்ற விளையாட்டு களை நேர்முகமாக ஒளிபரப்பு செய்கின்றபோது, ஏன் சட்ட மன்ற நிகழ்ச்சிகளைக்கூட பொதுமக்கள் அறிந்துகொள்கின்ற வகையிலே ஒளிப்பரப்புவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள் ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1987 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தையும், தமிழ்நாட்டு மக்களுடைய கருத்தையும் நிச்சயம் தமிழக அரசு மைய அரசுக்கு வலியுறுத்தும்.

மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சியிலே இரண்டாவது அலை வரிசையை தொடங்கவேண்டுமென்று மாநில அரசு மத்திய அரசுக்கு கோரிக்கை அனுப்பி இருக்கிறதென்பதை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி தொடங்குகின்ற இரண்டாவது அலை வரிசையை முழுக்க முழுக்க மாநிலத்திற்கு ஒதுக்கி, மாநிலமே தன்னுடைய பொறுப்பிலே ஒளிபரப்பு செய்துகொள்வதற்கு அனுமதியை மத்திய சர்க்கார் வழங்க வேண்டுமென்று மாநில அரசு கோருமா என்கின்ற விவரத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின் பிரகாரம் மத்திய அரசை மாநில அரசு கோரும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லி அஞ்சலில் தேசியப்படங்கள் என்று வாரா வாரம் ஒளிபரப்பு செய்யப்படுகின்றன. அதிலே, தமிழ், தெலுங்கு, மலையாளம் போன்ற படங்களையெல்லாம் போடுகிறார்கள். அவ்வாறு போடும்போது அவர்கள் பேசுகின்ற வசனங்களையும் பாடல்களையும் ஆங்கிலத்தில் டிரான்சிலேஷன் செய்து எழுத்து வடிவமாகக் காட்டுகிறார்கள். இந்திப் படங்கள் காட்டும்போது அப்படி காட்டுவது கிடையாது. அதையும் ஆங்கிலத்தில் டிரான்சிலேஷன் செய்து காட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்படுமா? தமிழ்ப் புத்தாண்டு அன்று தமிழ் படங்களைக் காட்டுவது கிடையாது. அதையும் காட்டுவதற்கு மத்திய அரசை மாநில சர்க்கார் வற்புறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி மைய அரசுக்கு தெரிவிக்கப்படும்.

டாக்டர் ந. மாசிலாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிரிக்கெட், டென்னிஸ் போன்ற விளையாட்டுக்களை ஒளி பரப்புகின்றபோது பகல் நேரங்களில் ஒளி பரப்புகின்றார்கள். இதனால் கல்விக்கூடங்களிலும், அரசு அலுவலகங்களிலும் பணியாற்றுகின்றவர்களின் கவனமெல்லாம் விளையாட்டின்பால் ஈர்க்கப்படுகிறது. இதைத் தவிர்க்கின்ற வகையில், இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை இரவு நேரங்களில் ஒளிபரப்பலாம் என்கின்ற ஆலோசனையை மைய அரசுக்கு மாநில அரசு வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் ஆலோசனையை மாநில அரசு மைய அரசுக்கு தெரிவிக்கும்.

திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைக்காட்சிக்கு நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கின்ற போது மத்திய அரசாங்கம் நம்முடைய மாநில செய்தித் துறை அதிகாரிகளைக் கலந்து இந்த நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிக்கின்றதா? அப்படி தயாரிக்கவில்லையென்று சொன்னால் நம்முடைய மாநிலத்தினுடைய அதிகாரிகளைக் கலந்து அந்த நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதற்கு நம்முடைய அரசாங்கம் அவர்களை வலியுறுத்துமா, வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-00)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அவர்கள் ஆலோசிப்பது இல்லை. எப்போதும் கலந்து செய்யவேண்டும் என்றுதான் நாம் தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.